ஊவா பரணகம பிரதேச சபை - 2022

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா பரணகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஊவா பரணகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமா்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமா்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பிரதேச அபிவிருத்தி உதவி செயற் திட்டத்தின் மூலம் பிரதேச சபைக்கு கிடைத்த ரூபா 25,021,311 மூலதன நிதி உதவியாகவும், செலவிடப்பட்ட தொகை மூலதன செலவினமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | கணக்குகள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மலசல கூட உதவி மற்றும் நிர்மாண வேலைகளுக்காக வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த ரூபா 2,985,000 ஆன 18 வேலைகள் நிறைவேற்றப்படாமல் கடன் கொடுத்தோராக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மலசல கூட உதவிக்காக கடன் உரித்து ரூபா 1,400,000 தொகையைப் பதிவழிப்பதற்கு முகாமைத்துவக் குழு பரிந்துரை பெற்றுக்கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபைக்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 127,564,613 பெறுமதி ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (ஈ) | வெளித்தரப்பினரால் சபைக்கு எதிராக தொடரப்பட்ட 03 வழக்கு நடவடிக்கைகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில் லை. | எதிர்வரும் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் வழக்கு தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்படும். | வழக்கு செயற்பாடுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட ரூபா 1,158,356 ஆன இருப்பு மீதிகளின் பௌதீக இருப்பு பட்டோலை அல்லது இருப்பு மெய்மையாய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிருவாக விதிக் கோவை | | | |
| (i) | விதி 19 | அடியிதழ் புத்தகங்களின் பாதுகாப்புத் தன்மை மற்றும் உரிய பயன்பாடுகள் | தற்போது சகல அடியிதழ் புத்தகங்களுக்காவும் அலுவலகத்தில் | உத்தியோகபூர்வ முத்திரை இடப்பட்ட |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்பாக சபை செயலாளர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் உத்தியோகபூர்வ முத்திரை வைக்கப்படாதிருந்த ரூபா 72,500 ஆன 1350 நுழைவுச் சீட்டுக்கள் போம்புறு எல்ல வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிடுவதற்காக விநியோகிக்கப்பட்டிருந்தது. | உத்தியோகபூர் முத்திரையிடல் மேற்கொள்ளப்படுகின்றது. | அடியிதழ் புத்தகங்கள் முறையான பிரகாரம் விநியோகிக்கப்பட ல் வேண்டும். |
| (ii) | விதி 59 | சபை எல்லையில் நடாத்திச் செல்லப்படுகின்ற கைத்தொழில்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலைமையின் காரணமாக மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை . | பிரதேசத்தில் காணப்படுகின்ற கைத்தொழில்கள் தொடர்பாக வருடாந்தம் மெய்மை ஆய்வு செய்து அவற்றை ஒழுங்குபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 104(4) | 2022 ஆகஸ்ட் 04 ஆம் திகதி விபத்திற்குட்பட்டிருந்த சபைக்குரிய கெப் வண்டி தொடர்பாக விபத்து ஏற்பட்டு 07 மாதங்கள் கடந்திருந்த போதிலும் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை முழுமையான அறிக்கை கிடைத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,018,030 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,308,375 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 3,019,540 | 2,993,051 | 2,163,947 | 829,104 | 3,019,540 | 3,164,418 | 2,584,829 | 579,589 |
| (ii) | வாடகை | 1,008,480 | 1,054,732 | 907,155 | 147,577 | 1,008,480 | 1,026,737 | 857,972 | 168,765 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,150,000 | 1,237,493 | 1,237,493 | 0 | 1,100,000 | 1,257,646 | 1,257,646 | 0 |
| (iv) | ஏனைய வருமானம் | 1,150,000 | 983,853 | 855,115 | 128,738 | 815,000 | 1,734,050 | 1,488,050 | 246,000 |
| | மொத்தம் | 6,328,020 | 6,269,129 | 5,163,710 | 1,105,419 | 5,943,020 | 7,182,851 | 6,188,497 | 994,354 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 இல் உள்ளவாறு காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படாத நிலுவை நீர்க் கட்டணம் ரூபா 499,154 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணம் அறவிடப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது அறிவித்தல் பதாதைகளை இனங்காண்பதற்காக களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே விளம்பர அறிவித்தல் பதாதை பதிவேட்டின் படி மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் 27 விளம்பர அறிவித்தல் பதாதைகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 16 பதாதைகளுக்கு அறவிடவேண்டிய கட்டணம் ரூபா 66,219 அறவிடப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டிற்காக மெய்மை ஆய்வு மேற்கொள்ளப்படவில்லை. 2023 ஆம் ஆண்டிற்காக விளம்பர அறிவித்தல் பதாதை மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வருடாந்தம் விளம்பர அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக மெய்மையாய்வு மேற்கொண்டு கட்டணம் அறவிடப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டு முதல் நடாத்திச் செல்லப்படுகின்ற சுடலைக் கூடத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுடலைக் கூடம் மற்றும் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பிரதேசத்தின் மக்களுக்கு நீரை வழங்குவதற்காக 15 நீர் செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் நீர் மாதிரிகளைப் பரீட்சித்து அதன் தரத் தன்மையைப் பரீட்சிக்காமல் நீர் வழங்கப்பட்டிருந்தது. | நீர் மாதிரிகளைப் பரீட்சித்தல் மற்றும் அவை சுத்திகரிப்பதற்கு கணிசமான கிரயம் ஏற்படுகின்றமையால் வழங்கப்படுகின்ற நீர் குடிப்பதற்கு பொருத்தமற்றது என பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நீரின் தரத் தன்மையைப் பரீட்சித்து மக்களின் குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்தல் வேண்டும். |
| (இ) | மேலதிக மலசல கூடம் தேவையான இடங்களை இனங்கண்டு மலசல கூட வசதிகளை வழங்க வேண்டி இருந்த போதிலும் சபைக்குரிய போம்புறு எல்ல சுற்றுலாப் பிரதேசத்தைப் பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளில் முறையே ரூபா 50 மற்றும் ரூபா 500 ஆக நுழைவுச் சீட்டுக் கட்டணம் அறவிடப்பட்ட போதிலும் அந்த இடத்தில் மலசல கூட வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | மலசல கூடத்திற்காக இட வசதி பெற்றுக் கொள்ளும் பிரச்சினையின் காரணமாக மலசல கூடம் நிர்மாணித்தல் தாமதமடைந்திருந்தது. | தேவையான இடங்களை இனங்கண்டு பொது வசதிகள் வழங்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டிருந்த லுணுவத்த சந்தைத் தொகுதி கட்டிடத்தை நிர்மாணிக்கும் காணியில் மண் வெட்டுவதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குநருக்கு செலுத்துவதற்குரிய மதிப்பீடு மற்றும் இயந்திர மணித்தியால எண்ணிக்கை தொடர்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தரின் அறிக்கையின்றி சபையின் நிதியத்தில் இருந்து ரூபா 1,329,200 செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். | இயந்திர பொறி முறைகளை ஈடுபடுத்தும் போது இயந்திர மணித்தியால எண்ணிக்கை தொடர்பான மதிப்பீடு மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தற்காலிக மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட கடைகள் மெய்மையாய்வின் போது 12 கடைகள் உப வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தமை இனங்காணப்பட்டிருந்த போதிலும் உப வாடகைக்கு வழங்கியமை தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய தவறு சரிசெய்யப்படும். | உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள கடை தொடர்பாக உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தியின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை வாடகை காலரீதியில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடை உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக திருத்தப்பட்ட வாடகை அறவிடப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஆம் ஆண்டின் போது சபைக்குரிய 44 கடைகள் மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை மதிப்பீடு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை . | 2016 ஆம் ஆண்டில் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்ட போதிலும் கடை உரிமையாளர்களின் எதிர்ப்பின் காரணமாக திருத்தப்பட்ட வாடகை அறவிடப்பட்டுள்ளது. | கால ரீதியில் கடை வாடகையை மதிப்பீடு செய்து புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்து விற்பனை செய்யப்பட்ட காணிகளில் பத்து சதவீதமான மொத்தமாக 03 ஏக்கர் 01 றூட் 25.45 பேர்ச் அளவான 07 காணிக் கூறுகளில் 06 காணிக் கூறுகளின் எல்லை இனங்காணப்பட்டு உரித்து உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 07 காணிக் கூறுகளிலும் எந்தவொரு அபிவிருத்தி பணிகளும் மேற்கொள்ளப்படாமல் பயனற்று காணப்பட்டது. | சபை நிதியம் போதியளவாக இல்லாமை, எல்லை அடையாளப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் பாதுகாப்பு வேலிகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். விளைவற்ற காணிகள் சன நடமாட்டத்தின் பின் பொது நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படும். | சபைக்குரிய காணிகளை சரியாக இனங்கண்டு ஆக்கபூர்வமான பணிகளுக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |